2014 ஜனவரி 31]

5. மதுரையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் அமர்வு) கூடுதல் உறுப்பினரை (நீதிமுறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2) துறையின் 10-7-2013 ஆம் நாளிட்ட 94 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

7. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2014 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

*****

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS